2026 பிப்ரவரி மாதம் 02– ஆம் தேதி திங்கட்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர் : 97/2022

2025–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02– ஆம் தேதி திங்கட்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW1 நபரின் வாக்கு மூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – கார்த்திக்கேயன் |
| தந்தை பெயர்: | பால்ராஜ் |
| ஊர்: | T.சுப்புலாபுரம் |
| வட்டம்: | ஆண்டிபட்டி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயம் |
| வயது : | 30 |

தேதி : 02.02.2026.

முதல் விசாரணை: –

நான் இந்த மனுவில் 2ம் மனுதாரர் ஆவேன். 1ம் மனுதாரரருக்காகவும் சேர்த்து மனு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவற்றை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக ஏற்க வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | 06.11.2021ம் தேதியிட்ட கொடைக்கானல் காவல்நிலைய குற்ற எண்.662/2021 முதல் தகவல் அறிக்கை | **ம.சா.ஆ.1** | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 2. | 24.03.2024ம் தேதியிட்ட நீதித்துறை நடுவர் நீதிமன்றம்-II, கொடைக்கானலில் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கை | **ம.சா.ஆ.2** | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 3. | 25.11.2021ம் தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வறிக்கை | **ம.சா.ஆ.3** | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 4. | நீதித்துறை நடுவர் நீதிமன்றம்-II, கொடைக்கானலில் தாக்கல் செய்த சாட்சிகளின் கூ.வி.மு.ச.161(3) வாக்குமூலங்கள் | **ம.சா.ஆ.4** | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 5. | 06.11.2021ம் தேதியிட்ட இறந்துபோன எனது அம்மா அழகுராணியின் பிரேத பரிசோதனை அறிக்கை | **ம.சா.ஆ.5** | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 6. | விபத்திற்குண்டான TN 59 CK 2761 என்ற பதிவு எண்கொண்ட மகிழுந்தின் பதிவு சான்று | **ம.சா.ஆ.6** | ஒளிப்பதிவு நகல் |
| 7. | 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் | **ம.சா.ஆ.7** | ஒளிப்பதிவு நகல் |
| 8. | 2ம் எதிர்மனுதாரர் கொடுத்த காப்பீட்டுச் சான்று | **ம.சா.ஆ.8** | ஒளிப்பதிவு நகல் |
| 9. | இறந்துபோன அழகுராணியின் ஆதார் அடையாள அட்டை<br>(அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) | **ம.சா.ஆ.9** | ஒளிப்பதிவு நகல் |
| 10. | 1ம் மனுதாரர் பால்ராஜின் ஆதார் அடையாள அட்டை<br>(அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) | **ம.சா.ஆ.10** | ஒளிப்பதிவு நகல் |
| 11. | 2ம் மனுதாரர் கார்த்திக்கேயனின் ஆதார் அடையாள அட்டை<br>(அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) | **ம.சா.ஆ.11** | ஒளிப்பதிவு நகல் |

| | | | |
|---|---|---|---|
| 12. | இறந்துபோன அழகுராணி கட்டுமான தொழிலாளர் நலவாரியத்தில் உறுப்பினராக உள்ளதற்கு உறுப்பினர் அடையாள அட்டை | **ம.சா.ஆ.12** | ஒளிப்பதிவு நகல் |
| 13. | அழகுராணியின் இறப்புச் சான்று | **ம.சா.ஆ.13** | கணினிவழிப் பெறப்பட்டது |
| 14. | 10.12.2021 ம் தேதியிட்ட இறந்துபோன அழகுராணியின் வாரிசுச் சான்றிதழ் | **ம.சா.ஆ.14** | கணினிவழிப் பெறப்பட்டது |
| 15. | 1 ம் மனுதாரரின் குடும்ப அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) | **ம.சா.ஆ.15** | ஒளிப்பதிவு நகல் |
| 16. | 01.04.2017 ம் தேதியிட்ட இறந்துபோன அழகுராணி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் உள்ளதற்கான உறுப்பினர் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) | **ம.சா.ஆ.16** | ஒளிப்பதிவு நகல் |

நான் மனுவில் கோரியவாறு மனுப்படி உத்தரவாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>1, 2 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-**

1, 2 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 02.02.2026 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.02 17:51:29 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
02.02.2026